**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்**

**DVC. No.1/2025**

**PW–1**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி.தேவகி, Grade III Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு புகார்தாரர் தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு ஜீலை திங்கள் 10 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். திரு.ஜீவிதா<br>வயது. | நாள் **10.07.2026** |
| க/பெ. திரு.விக்னேஷ் | தொழில் |
| கிராமம் | வட்டம், |

**ம.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்.**

இந்த மனுவில் நான் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 07.09.2022 தேதியிட்ட திருமண பத்திரிக்கை அசல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 07.09.2022 தேதியிட்ட திருமண புகைப்படம் அசல் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 08.11.2024 தேதியிட்ட நான் 1வது எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 1வது எதிர்மனுதாரரும், அவரது வழக்கறிஞரும் எனது பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 08.10.2024 தேதியிட்ட நான் அம்பத்தூர் மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக கொடுத்த புகார் நகல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 08.10.2024 தேதியிட்ட எனது புகாருக்கு அம்பத்தூர் மகளிர் காவல் நிலையத்தில் வழங்கிய சி.எஸ்.ஆர் எண்.812/2024 அசல் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 14.10,2024 தேதியிட்ட எனது புகாரின் பெயரில் மகளிர் காவல் நிலையத்தினர் குடும்ப ஆலோசனை மையத்திற்கு வழங்கிய கடிதம் அசல் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. என்னுடைய ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது அது ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினர்கள் ஆவார்கள்.

குறுக்கு விசாரணை, இல்லை.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
DM Cum JM
Cheyyur